# இஸ்லாமிய நோக்கில்

# சுதந்திரம்



ஸபீர் ஹாபிஸ்

www.bookshia.com
knowledge enlivens the soul

الحرية فى ضوء الاسلام

# இஸ்லாமிய நோக்கில்

# சுதந்திரம்

ஸபீர் ஹாபிஸ்

www.bookshia.com
knowledge enlivens the soul

□**இஸ்லாமிய நோக்கில் சுதந்திரம்** □ஸபீர் ஹாபிஸ் [மௌலவி அல்ஹாபிஸ் எம்.யூ.எம். ஸபீர் B.A. (Hon's)] ரி.சி. வீதி, ஏறாவூர்-01, ஸ்ரீலங்கா. □பதிப்புரிமை: ஆசிரியருக்கு □முதற்பதிப்பு: ஜனவரி 2006 □பிரதிகள்: 1000 □அட்டை வடிவமைப்பு: எம்.ஐ. பிந்துல் ஹுதா ஸபீர் □கணனி அச்சுக்கோப்பு: ஹாபிஸ் கம்ப்யூட்டர் சென்டர் □அச்சு: ஏ.ஜே.பிரிண்ட்ஸ், தெஹிவளை □தருகை:70 | =

🗗**ISLAMIYA NOKKIL SUTHANTHIRAM** (Freedom in Islamic View) 🗗Safeer Hafis [Moulavi AlHafis M.U.M. Safeer B.A (Hon's)] No:09, T.C. Road, Eravur.01, Sri Lanka. © Author 🗗1st Edition: January 2006🗗Cover design: M.I. Binthul Hudha Safeer 🗗Copies: 1000 🗗Typset by : Hafis Computer Centre 🗗Printed by: AJ Prints, Dehiwala, Sri Lanka. 🗗Prize 75/=

*சமர்ப்பணம்*

சுதந்திரம் மறுக்கப்பட்ட அனைவருக்கும்

# உள்ளடக்கம்


சுதந்திரம் ........................................................................ *11*
சிந்தனையும் தெரிவும் ...................................................... *12*
சுதந்திரத்தின் நிலைக்களன் ............................................. *14*
சுதந்திரமும் பொறுப்பும்...................................................... *16*
சுதந்திரத்தின் ஆரம்பம் ...................................................... *19*
சுதந்திரமும் ஒழுங்கும் ....................................................... *21*
அறிவும் சுதந்திரமும் .......................................................... *23*
சுதந்திரத்தின் பிரயோகம்................................................... *26*
சுதந்திரத்தைப் பாதிப்பவை................................................. *29*
சுதந்திரமும் சீராக்கமும் ..................................................... *34*
சுதந்திரத்தின் சுற்றுவட்டம்................................................. *37*

# அணிந்துரை

இஸ்லாம் மனிதனின் தனிப்பட்ட வாழ்விலும் சமூக வாழ்விலும் இறைவனின் கட்டளைக்கு பூரணமாக அடிபணியும் வகையில் அமைந்த நெறிமுறைகளைக் கொண்ட ஒரு மதமாகும். மனித சமூகத்திற்கு இறைவனின் இறுதியான வழிகாட்டுதலை அது கொண்டுள்ளது. எனவே தனக்கும் சமூகத்திற்கும் வாழ்க்கையின் அனைத்துத் துறைகளுக்குமான நியதிகளை சட்டங்களை அது உள்ளடக்கியுள்ளது. மதத்தோடு தொடர்புடைய அம்சங்கள், உலகியல் வாழ்வோடு தொடர்புடைய அம்சங்கள் என வாழ்க்கையைக் கூறுபோட்டு நோக்காது, வாழ்க்கையின் அனைத்துத் துறைகளுக்கும் ஒரு மதப் பரிமாணத்தை அது வழங்குகின்றது.

இந்தப் பின்னணியிலேயே சுதந்திரம் பற்றிய இஸ்லாமிய கோட்பாடு நோக்கப்பட வேண்டும். ஆரோக்கியமான சமபலமும் உறுதியும் உள்ள ஒரு சமூகத்திற்கு சுதந்திரம் மிக அடிப்படையானதாகும். மனிதனின் ஆளுமையை சுதந்திரமான சூழலில் வளர்ச்சியடையத் துணை புரிகின்ற ஒரு சமூக அமைப்பையே இஸ்லாம் விரும்புகின்றது. எந்தவொரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனை அடிமைப்படுத்த உரிமையில்லை என்பதை அது மிக உறுதியாகக் கூறுகின்றது.

இஸ்லாமிய அரசியல் அமைப்பில் அடக்குமுறைகள் அனைத்தும் அவற்றின் அனைத்து வடிவங்களிலும் தடுக்கப்பட்டவையாகும். அத்துடன் இஸ்லாமிய அரசு தனிமனிதர்களின் உயிர், உடைமை, கண்ணியம் ஆகியவற்றைப் பாதுகாக்கின்ற பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது. நியாயமான சுதந்திரத்தை சாத்தியமாக்குவதற்காக இறைவன் மனிதனின் செயற்பாடுகளுக்கு ஓர் எல்லையையும் வரம்பையும் ஏற்படுத்தியுள்ளான். இறைவன் வகுத்துள்ள இந்த வரம்புகள் மீறப்படுகின்ற போது சுதந்திரம் துஷ்பிரயோகமாக மாறிவிடும். இது, துஷ்பிரயோகம் செய்பவனையும், அவன் ஓர் அங்கமாகவுள்ள சமூகத்தையும் அழித்து விடும்.

இந்தப் பின்னணியில் மேற்காணும் விடயங்களைத் தெளிவுபடுத்தும் வகையில் ஸபீர் ஹாபிஸ் எழுதியுள்ள 'இஸ்லாமிய நோக்கில் சுதந்திரம்' எனும் நூல் காலத்தின் தேவையாக அமைந்துள்ளது. சுதந்திரம் என்றால் என்ன என்பதையும், அது எவ்வாறு பிரயோகிக்கப்பட வேண்டும் என்பதையும், மனிதனுக்கு சுதந்திரம் ஏன்

அவசியம் என்பதையும் 'சுதந்திரத்தின் நிலைக்களன்' 'சுதந்திரமும் ஒழுங்கும்' 'அறிவும் சுதந்திரமும்' 'சுதந்திரத்தின் பிரயோகம்' 'சுதந்திரத்தின் சுற்றுவட்டம்' போன்ற பல்வேறு தலைப்புகளில் அழகுற அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

சுதந்திரம் எவ்வளவு அவசியமானதோ அதை விட அவசியமானது அதனை உரிய முறையில் பிரயோகிப்பதாகும் எனும் உண்மையை குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களிலிருந்து தெளிவுபடுத்தியுள்ள ஸபீர் ஹாபிஸ், சுதந்திரம் மறுக்கப்படுவதன் மூலமான பாதிப்பை விட அதன் தவறான பிரயோகத்தின் மூலமான பாதிப்பு மிகப் பாரியதாகும் என்பதையும், அளவுக்கு மீறிய சுதந்திரம் சமூகத்தில் எவ்வாறான பாதிப்புகளையும் சீரழிவுகளையும் ஏற்படுத்தியுள்ளது என்பதையும் பிரான்ஸ், பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் புள்ளிவிபரங்களைக் கொண்டு நிறுவியுள்ளமை அவரது விரிவான தேடலுக்கும் விடாமுயற்சிக்கும் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

கிழக்குப் பல்கலைக்கழகப் பட்டதாரியான ஸபீர் ஹாபிஸின் இம்முயற்சியைப் பாராட்டுவதோடு, அவரது நன்னோக்கங்கள் நிறைவேற பிரார்த்திக்கின்றேன். அவரது இப்பணியை அல்லாஹ் அங்கீகரிப்பானாக.

°.ÛàÃì øçv[ *(M.A)*
விரிவுரையாளர்
இஸ்லாமிய கற்கைகள் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை, செங்கலடி, ஸ்ரீலங்கா.
*11.11.2005*

# முன்னுரை

இரண்டாம் கலீபா உமர் (ரழி) அவர்கள் பொதுப் பிரசங்கமொன்றை நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். மஹர் பற்றியதாக அவர்களது பிரசங்கம் அமைந்திருந்தது. ‘‘திருமணத்தின் போது, பெண்கள் மிகக் கூடுதலான தொகையை ஆண்களிடம் மஹராக எதிர்பார்க்கின்றார்கள். இதனால் இளைஞர்கள் தமது திருமணத்தின் போது மிகவும் சிரமப்படுகின்றார்கள். மஹர் தொகையை சேகரிக்க முடியாமல் திணறுகின்றார்கள். எனவே, பெண்கள் தமது மஹர் தொகையைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென நான் உங்களுக்குப் பணிக்கின்றேன்’’

கலீபாவின் இவ்வுரையைக் கேட்டதும், கூட்டத்திலிருந்து ஒரு பெண் எழுந்து நின்றாள். ‘‘கலீபாவே! மஹர் என்பது பெண்களது உரிமை. ஒரு பெண் தான் விரும்பும் அளவு மஹர் தொகையை நிர்ணயித்துக் கொள்ள முடியும் என இறைவனும் இறைத்தூதரும் கூறியிருக்கின்றார்கள். அவ்வாறிருக்க மார்க்க விதிகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தங்களுக்கு என்ன அதிகாரம் உள்ளது?’’ எனக் கேள்வி எழுப்பினாள்.

கலீபா, தன் தவறை உணர்ந்து மன்னிப்புக் கோரினார்; தன் கூற்றை வாபஸ் வாங்கினார்.

இஸ்லாம், ஏனைய வாழ்க்கைக் கோட்பாடுகளைப் போலவே சுதந்திரத்தையும் வெறும் கருத்தியலாக நோக்காது, தனிமனித மற்றும் கூட்டு வாழ்வின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றெனஅடையாளப்படுத்துகின்றது. ஒழுக்கச் செறிவு மிக்க சமூகத்தின் முக்கிய பண்பாக அதனை வலியுறுத்துகின்றது. அதனால்தான், அல்குர்ஆன் தொடக்கம் நபிமார்கள், ஸஹாபாக்கள், நல்லடியார்கள் ஈறான அனைத்து முன்மாதிரிகளிலும் இதற்கான வற்புறுத்தலும் அறிவுறுத்தலும் பொதிந்துள்ளன.

நடைமுறை வாழ்வில் முக்கியத்துவம் மிக்க பிரக்ஞையாகக் கணிக்கப்பட வேண்டிய சுதந்திரம் பற்றி, இஸ்லாமிய நோக்கிலான அறிமுகத்தையும் ஆரம்ப விளக்கத்தையும் முன்வைப்பது இந்நூலின் நோக்கமாகும்.

சுதந்திரம் என்ற எண்ணக் கருவையும் அதன் உயிர்ப்பாதைகளையும் வரையறுத்துக் கொள்வதிலான சமய, சமூக சர்ச்சைகள் முடிவுறாதிருக்கும் இக்காலக் சூழலில், இத்தகைய சிறு நூலொன்றின் வரவு அவசியம் என நான் கருதினேன். அதற்கென மேற்கொண்ட நீண்ட தேடலின் போது சிக்கிய சில கருத்துகளைக் கொண்டு இதனைத் தொகுத்துள்ளேன்.

மிகப்பெரிய உள்ளடக்கத்தைக் கொண்டுள்ள சுதந்திரம் எனும் தலைப்பு, எனது இளம் எழுத்துகளுக்கும் சிந்தனைகளுக்கும் மிகப் பெரும் சுமையாய் கனத்தன. எனினும், இயலுமானளவு பலத்தைத் திரட்டி சுமந்து வந்துள்ளேன்; தந்துள்ளேன்.

இந்நூற் தொகுப்பின் போது எனக்கு ஊக்கமும் உற்சாகமும் தந்து மனமுவந்து அணிந்துரையும் வழங்கிய கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் துறை விரிவுரையாளர் ஏ.ஜஃபர் ஹுஸைன் (எம்.ஏ), மற்றும் இத்தொகுப்பின் போது எனக்கு பக்க பலமாக இருந்து, அழகிய அட்டைப்படத்தையும் வரைந்து தந்த என் மனைவி எம்.ஐ. பிந்துல் ஹுதா, மற்றும் வெளியீட்டகத்தார், அச்சகத்தார் அனைவருக்கும் என் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஸபீர் ஹாபிஸ்**

09, பெரிய பாலத்தடி வீதி,
ஏறாவூர்-01, ஸ்ரீலங்கா.
safeersl@hotmail.com
13.11.2005

# சுதந்திரம்

*நீல நிற வான்வெளியில் பறவைகள், கூட்டங்கூட்டமாகவும் தனித்தனியாகவும் நீந்திச் செல்கின்றன. மகிழ்ச்சியினதும் எதிர்பார்ப்பை அடைந்து கொள்வதிலான ஆர்வத்தினதும் செழிப்பு அவற்றின் ஆன்மாக்களில் விரவியிருக்கின்றன. ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கும், ஒரு கரையிலிருந்து இன்னொரு கரைக்கும், ஒரு வயலிலிருந்து இன்னொரு வயலுக்கும் அவை பயணிக்கின்றன. மகிழ்ந்து, மனம்பூரித்து தமது உணவுகளையும் தமது வாழ்விடங்களையும் தமது மகிழ்ச்சிக்கான ஸ்தலங்களையும் அவை தேர்வுசெய்து கொள்கின்றன. எவரும் அவற்றைத் தடுப்பதில்லை. அவற்றைக் கொடுமைப்படுத்துகின்ற, அல்லது அவற்றின் இறைச்சியிலும் அவற்றின் பெறுமதியிலும் ஆசைகொண்ட சிலரைத் தவிர மற்றெவரும் அவற்றை சிறைப்பிடிப்பதில்லை. அவை, இயல்பிலேயே சுதந்திரமாக வாழ்கின்றன.*

*பறவைகளினது வாழ்க்கை மட்டுமன்றி, மனிதன் மற்றும் மிருகங்கள் உள்ளிட்ட உலகின் ஒவ்வொரு உயிரினத்தின் வாழ்க்கையும் சுதந்திரத்தைக் கொண்டுள்ளது. உயிரினங்களின் வாழ்க்கையில் மறுக்கவோ மலினப்படுத்தவோ முடியாத பெரும் முக்கியத்துவத்தை உள்வாங்கியுள்ள சுதந்திரமானது, உலகின் சமாதானத்திலும் சௌஜன்யத்திலும் பெரும் பங்காற்றும் ஆழமான பெறுமானத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது.*

*மனோவுணர்களை ஆழமாகக் கொண்டு சிருஷ்டிக்கப்பட்டுள்ள இவ்வுலகில், எவருக்கும் பிறரை ஆதிக்கம் செலுத்தும் அதிகாரம் வழங்கப்படவில்லை. அவ்வாறே, சீர்திருத்தத்தை நிலைநிறுத்துவதற்கும் பாதிப்புகளைக் களைவதற்குமான முனைப்புகள் தவிர்ந்த ஏனைய விடயங்களை மேற்கொள்வதற்கும் எவருக்கும் உரிமை வழங்கப்படவில்லை. மனிதன் இப்பூமியில் சுதந்திரமுள்ளவனாகப் படைக்கப்பட்டுள்ளான்.*

*ஹஸ்ரத் அலி (ரழி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: “மனிதர்களே! நிச்சயமாக நபி ஆதம் (அலை) அவர்கள்*

அடிமையாகப் படைக்கப்படவில்லை. எனவே, மனிதர்கள் அனைவருமே சுதந்திரமுள்ளவர்களாவர்"

மேலும் கூறுகின்றார்கள்: "நீ பிறருக்கு அடிமையாயிராதே. இறைவன் உன்னை சுதந்திரமுள்ளவனாகப் படைத்துள்ளான்"

எனவே, மனிதர்கள் அனைவரும் சுதந்திரமுள்ளோராகப் பிறந்துள்ளனர். தமது சுதந்திரத்தை அடைவதற்கும் அனுபவிப்பதற்குமான உரிமையையும் அவர்கள் கொண்டுள்ளனர். சுதந்திரத்தினூடாக அவர்கள் அடையப்பெறும் சந்தர்ப்பங்களும் சலுகைகளும் அவர்களுக்குரிய தனிப்பட்ட சொத்துகளாகும். அந்த சொத்துகளை கபளீகரம் செய்யும் துர்ச்செயலாகவே அவர்களது சுதந்திரத்தின் மீதான மறுப்புகளும் திணிப்புகளும் அமையும். ஆயினும், இயல்பில் மனிதர்கள் சுதந்திரமுள்ளோராவர்.

## சிந்தனையும் தெரிவும்

ஒருவன் மனிதத்துவம் என்பதன் கருத்தை அறிந்து கொள்ள வேண்டுமெனில், சுதந்திரம் என்பதன் அர்த்தத்தை அவன் விளங்கிக் கொள்வது அவசியம். சுதந்திரம் என்பதன் அர்த்தத்தை அவன் விளங்கிக் கொள்ள வேண்டுமெனில், தான் சிந்திப்பவன், சுயமாக தெரிவு செய்பவன் என்பதையும், தான் செய்பவற்றுக்கு தானே பொறுப்பாளி என்பதையும், புத்தியும் சிந்தனா சக்தியும் உள்ளவனாக அல்லாஹ் தன்னைப் படைத்துள்ளான் என்பதையும் அவன் அறிந்து கொள்வது அவசியமாகும்.

ஒருவனது உள்ளத்தில், பல்வேறு வகையான உருவகங்களும் உணர்வுகளும் ஆசைகளும் எழுகின்றன. குறித்த ஒரு விடயத்தை செய்வதைப் பற்றி, அல்லது அதனை செய்யாது விடுவதைப் பற்றி அவன் சிந்திக்கின்றான். சில உருவகங்கள், உணர்வுகள், ஆசைகளில் அவனுக்கு ஆர்வம் மேலிடுகின்றது. அவற்றில் சிலவற்றை அவன் தெரிவு செய்கின்றான். சிலவற்றை நிராகரித்து விடுகின்றான்.

எனவே, அவன் தெரிவுச் சுதந்திரமுள்ள ஒரு மனிதன். தெரிவு செய்வதற்கான சக்தியை அல்லாஹ் அவனுக்கு வழங்கியுள்ளான். குறித்த ஓர் உணவில் அவனுக்கு ஈடுபாடு தோன்றுகின்றது; அவன் அதனைத் தெரிவு செய்கின்றான். குறித்த நிறத்திலான உடையில் அவனுக்கு ஈடுபாடு தோன்றுகின்றது; அவன் அதனைத் தெரிவு செய்கின்றான். குறித்த ஓர் அறிவை, அல்லது விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள அவனுள்ளம் விரும்புகின்றது; அவன் அதனைத் தெரிவு செய்கின்றான். ஒரு ஹதீஸை அறிந்து கொள்ள அவன் மனம் அவாவுறுகின்றது; அவன் அதனைத் தெரிவு செய்கின்றான். குறித்த ஒரு நகருக்கு பயணம் செல்ல வேண்டுமென அவன் மனம் விரும்புகின்றது; அவன் அதனைத் தெரிவு செய்கின்றான். குறித்த சில வேலைகள், தொழில்களில் அவனுக்கு ஈடுபாடு தோன்றுகின்றது; அவற்றை அவன் தெரிவு செய்து கொள்கின்றான். பல்வேறு வகையான கொள்கைகள், பழக்க வழக்கங்கள், நடைமுறைப் பிரயோகங்கள், நல்லொழுக்கப் பண்புகள் அவனை எதிர்கொள்கின்றன; அவை பற்றி அவன் சிந்தித்து தனக்குப் பிடித்தமானதைத் தெரிவு செய்து கொள்கின்றான்.

எனவே, அவன் சுதந்திரமுள்ளவன் என்பதை தன் உள்ளத்தில் உணர்கின்றான். ஆயினும், தன்னுடைய சுதந்திரத்தைப்

*பிரயோகிக்கும் போதும், தனது சிந்தனைகளையும் ஆசைகளையும் வாழ்வில் நடைமுறைப்படுத்த முனையும் போதும் பல்வேறு புறத்திலிருந்தும் எதிர்ப்புகளுக்கும் தடைகளுக்கும் அழுத்தங்களுக்கும் அவன் முகங்கொடுக்கின்றான். அவை அவனுடைய உணர்வுகளைப் பிடுங்கி, சுதந்திரத்தைப் பறித்து, எதிர்பார்ப்புகளையும் நசுக்கிவிடுகின்றன.*

*இவ்வேளையில், சுதந்திரம் என்பது, மென்மையானது; அது தன் ஆன்மாவில் வாழுகின்றது என்பதையும், அது தனது உள்ளுணர்விலும் புத்தியிலும் சிறைப்பட்டுள்ள சிந்தனைகளையும் எண்ணங்களையும் களையக்கூடியது என்பதையும், அந்த சிறையிலிருந்து ஜீவிய உலகுக்கு அது வெளிப்படுவது தடைப்பட்டுள்ளது என்பதையும் அவன் உணர்கிறான்.*

## சுதந்திரத்தின் நிலைக்களன்

சுதந்திரம் என்பது மனிதர்களுக்குரிய சொத்தாகும். எனினும், அந்த சுதந்திரத்தை எங்ஙனம் பெறுவது? மனித சுதந்திரம் பற்றி எங்கே தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளது? அதன் தன்மைகளையும் பண்புகளையும் தெளிவுபடுத்துகின்ற நிலைக்களன் எது?

இந்த வினாக்களுக்கெல்லாம் 'அல்குர்ஆன்' என்று ஒட்டுமொத்தமாக பதிலுரைக்க முடியும். ஏனெனில், சுதந்திரம் பற்றி ஆய்வு செய்யுமிடத்து அதன் சகல பண்புகளையும் தெளிவாக விபரிக்கும் வரையறுக்கும் சிறந்த நூலாக அல்குர்ஆன் முதனிலை பெறுகின்றது. அல்லாஹ்வின் நீதியிலும் இயற்கையிலும் உள்ள ஓர் அம்சமாக சுதந்திரத்தைப் பிரகடனம் செய்வதே அல்குர்ஆனின் முதனிலைக்கான காரணமாகும்.

அல்லாஹ் மனிதனை சுதந்திரமுள்ளவனாகப் படைத்துள்ளான். அவனுக்கு தெரிவுச் சுதந்திரத்தை வழங்குமுன் அவனைக் கேள்வி கணக்குக் கேட்பதை அல்லாஹ் விலக்கியுள்ளான். இது, மனிதனது சுதந்திரத்தையும் தெரிவையும் பறைசாற்றுவதாக அவனது செயலும் நிலையும் அமைய வேண்டும் என்ற நோக்கத்தில் நிறுவப்பட்டதாகும்.

அல்குர்ஆன் குறிப்பிடுவதாவது; "அவர்கள் எத்தகையோரெனில், தமது தௌராத்திலும் இன்ஜீலிலும் குறிப்பிடப்பட்டுள்ளவராக தாம் கண்ட அந்த உம்மி நபியைப் பின்பற்றுவார்கள். அந்நபி, அவர்களுக்கு நன்மையை ஏவி தீமையை விலக்குவார். நல்லவைகளை அவர்களுக்கு ஆகுமாக்கி, தீயவற்றை அவர்களுக்குத் தடுத்துவிடுவார். அவர்களது சுமையையும், அவர்கள் மீதுள்ள கடினங்களையும் போக்கிவிடுவார்....." [1]

அல்குர்ஆன், மனிதனுக்கு அவனது சுமைகளை இறக்கிவைக்க விரும்புகின்றது என்பதையும், கொடுமைக்காரர்கள் அவர்கள் மீது சுமத்தியுள்ள, அவர்களது கழுத்துகளை இறுகப் பிணைத்துள்ள கடின நிலைகளிலிருந்து மனிதர்களை விடுதலையாக்கி வைக்க விழைகின்றது என்பதையும் இந்த இறை வசனத்தில் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

தவிரவும், அல்குர்ஆன், அறிவார்ந்த புத்திசார்ந்த சுதந்திரத்துடன் சிந்திப்பதன் பாலும் தனது வாழ்க்கைக்கான பாதையைத் தெரிவு செய்வதன் பாலும் மனிதனை

*அழைப்பதனூடாக அது சுதந்திரத்தின் பால் பொதுவான அழைப்பு விடுக்கின்றது என்பதையும் விளங்கிக் கொள்ள முடிகின்றது. இது, பேணுதல், விளக்கம், அறிவார்ந்த ஆத்மார்த்தமான நம்பிக்கை என்பவற்றின் மூலம் மனிதன் சுதந்திரமுள்ளவனாக இருப்பதை வலியுறுத்தும் அம்சமாகும்.*

*இந்த விளக்கம், அல்குர்ஆன் வசனத்தில் இவ்வாறு வந்துள்ளது: "இவ்வாறுதான், நீங்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காக, அல்லாஹ், உங்களுக்கு தெளிவுபடுத்துகின்றான்"*[2]

## சுதந்திரமும் பொறுப்பும்

சுதந்திரமுள்ளவன், தான் விரும்பியவற்றைச் செய்வான்; அவனது சுதந்திரம் தவறாகப் பிரயோகிக்கப்படும் போது, தனக்கும் பிறருக்கும் மட்டுமன்றி தனது சுதந்திரத்துக்கும் கூட அழிவை ஏற்படுத்தும் தீங்கின் பால் அவன் இட்டுச்செல்லப்படுகின்றான். எனவே, பொறுப்பும் தெரிவின் மீதான வல்லமையும் இருக்கின்ற போதே, சுதந்திரத்தின் நோக்கம் வலுப்பெறும். தெரிவு வல்லமை என்பது, முடியுமான ஒரு விடயத்தை செய்வதற்கும், சுயமாக அதைச் செய்யாது விடுவதற்கும் சுதந்திரமுள்ளவனாக அவன் இருப்பதாகும்.

சுதந்திரம், தெரிவு என்பவற்றின் மூலம், ஒரு மனிதன் தனக்கும் பிறருக்கும் பயனளிக்கின்ற, நல்ல செயல்களைப் புரிவதற்கு சக்தியுள்ளவனாகின்றான். எனவே, மனிதன் அறிவையும் விளக்கத்தையும் தேடிப்பெறுகின்றான். மருத்துவம், விவசாயம், மற்றுமுண்டான பல்வேறு உற்பத்தித் துறைகளில் தனக்கும் மனித சமுதாயத்துக்கும் பயனளிக்கும் பொதுவான நன்மைகளை தனது செயலில் உறுதிப்படுத்துகின்றான்.

தீயவனாகவும் பகைமை உணர்வு மிகைத்தவனாகவும் உள்ள ஒரு மனிதன், கொலை, கொள்ளை, அநீதி, கொடுமை முதலான பாவச்செயல்களைப் புரிந்து வன்முறைகளில் ஈடுபடுவதைப் போல், அம்மனிதன் நடைமுறை ஒழுங்கும் நல்லொழுக்கப் பண்பும் உள்ளவனாக இருக்கும் போது, தனக்கும் பிற மனிதர்களுக்கும் பயனுள்ள நல்ல விடயங்களை சுயமாக மேற்கொள்பவனாக மிளிர்வான். அவ்வாறே, ஒரு மனிதன், சரியான பாதையிலிருந்து தன்னைத் தடுக்கும் நெறிபிறழ்ந்த புத்தியின் மூலம் அல்லாஹ்வின் இருப்பை நிராகரிப்பது போலவே, சிந்திக்கும் சுதந்திரமுள்ள ஒருவன், தனது அறிவார்ந்த புத்தியினூடாக அல்லாஹ்வைப் பற்றிய அறிவையும் ஈமானையும் வலுப்படுத்திக் கொள்வான்.

புனித அல்குர்ஆன், மனித சிருஷ்டிப்பு பற்றி பேசும்போது, மனிதனுக்குள்ள சிந்தனை மற்றும் தெரிவுச் சுதந்திரம் பற்றி தெளிவாக வலியுறுத்துகின்றது; அல்லாஹ், மனிதனுடைய தேர்வுச் சுதந்திரத்தை தனது தெரிவு வல்லமையுடன் இணைத்துக் கூறுகின்றான்:

“நிச்சயமாக நாம் மனிதனை கலப்பான ஓர் இந்திரியத் துளியிலிருந்து, அவனை நாம் சோதிப்பதற்காகப் படைத்தோம். எனவே, செவியுறுவோனாகவும் பார்ப்போனாகவும் அவனை நாம்

ஆக்கினோம். நிச்சயமாக நாம் அவனுக்கு வழியைத் தெளிவுபடுத்திக் கொடுத்தோம். அவன் நன்றியுள்ளவனாக இருக்கலாம்; அல்லது நன்றி கெட்டவனாக இருக்கலாம்"[3]

மனிதன், நன்மையோ தீமையோ செய்வதற்கான அனைத்து வல்லமையையும் ஏற்பாடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளான் என்பதை அல்குர்ஆன் தெளிவுபடுத்துகின்றது. மனிதனுக்கு அவனது மனிதத்துவம் பூரணமடைந்தால், நன்மை தீமைக்கான பாதையை அவனுக்குத் தெளிவுபடுத்தியபின், அல்லாஹ் அம்மனிதனை சோதிப்பதற்கான பரீட்சை நிலைக்கு இட்டுச்செல்கின்றான். அவன் தனது வாழ்க்கைப் பாதையைத் தெரிவு செய்துகொள்ள வசதியாக பல்வேறு பாதைகளை அவனுக்கு முன்வைக்கின்றான். இது பற்றி அல்லாஹ் கூறுவதாவது: "நிச்சயமாக நாம் அவனுக்கு வழியைத் தெளிவுபடுத்திக் கொடுத்தோம். அவன் நன்றியுள்ளவனாக இருக்கலாம்; அல்லது நன்றி கெட்டவனாக இருக்கலாம்"[4]

அவன், அல்லாஹ்வுக்கான நன்றி தெரிவிப்பைத் தெரிவு செய்தால், நன்மையானதும் நேர்வழியானதுமான பாதையை அவன் அடைகின்றான். அதேவேளை, நன்றி கெட்ட நிலையை அவன் தெரிவு செய்தால், தீமையானதும் வழிகேடானதுமான பாதையை அவன் அடைகின்றான்.

இவ்வகையில், மனிதனில் சீர்திருத்தத்தைத் தோற்றுவிக்கும் சுதந்திரம் என்பது, மனிதர்கள் அதனைத் தவறாகப் பிரயோகிப்பதைத் தடுக்கும் பொறுப்புள்ள சுதந்திரமாகும் எனலாம்.

எனவே, மனிதன் தனது சுயதெரிவில் பொறுப்புள்ளவனாக இருக்கும் போது, யாசிக்கவும், கேள்வி கணக்குக் கேட்கவும், தான் செய்பவை செய்யாது விடுபவை பற்றித் தீர்ப்பளிக்கவும், தனது சுதந்திரத்தை நன்மையான பயன்பாடான அனைத்துத் துறைகளிலும் பிரயோகிக்கவும் உரித்துடையவனாகின்றான்.

பொறுப்பும் நன்மை தீமைக்கான கூலியும் அல்லாஹ்வுடைய நீதியின் வெளிப்பாடுகளாகும். நல்லவர்களையும் தீயவர்களையும் பிரித்துணர்த்துவதற்காகவும், இவ்வுலக வாழ்வில் மனிதர்கள் மகிழ்ச்சியும் ஆன்ம சுகந்தமுமுள்ள நிழலில் வாழ்வதற்காகவும், மறுமையில் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தின் மூலம் வெற்றி பெறுவதற்காகவும் அல்லாஹ் இவற்றை நிர்ணயித்துள்ளான்.

ஒரு மனிதனுக்கு தனது ஆன்மாவின் மீதுள்ள பொறுப்பு பற்றி அல்குர்ஆன் இவ்வாறு பேசுகின்றது:

*"ஒவ்வொரு மனிதனின் செயற் குறிப்பையும் அவனுடைய கழுத்தில் நாம் மாட்டியுள்ளோம். மறுமை நாளில் அவனுக்காக ஒரு புத்தகத்தையும் நாம் வெளிப்படுத்துவோம். விரிக்கப்பட்ட நிலையில் அவன் அதனைப் பெற்றுக் கொள்வான்"* [5]

எனவே, மனிதன் அவனது செயற்குறிப்புடன், அதாவது அவனது செயலுடன் பிணைக்கப்பட்டுள்ளான். அந்த செயல்கள் பற்றி மறுமையில் அவன் வினவப்படுவான். ஏனெனில், அவன் சுதந்திரமுள்ளவன்; சுயவிருப்புடனும் தெளிவுடனும் அச்செயலை அவன் தெரிவு செய்துள்ளான். அவன் தௌபாச் செய்தால், அல்லது தன்னை சீர்திருத்திக் கொண்டால் மாத்திரமே அவனது நியாயப்படுத்தல்கள் அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்படும். மனிதன் சுயவிருப்புத் தெரிவுச் சுதந்திரமுள்ளவனாகையால், தனது செயல்கள் பற்றி வினவப்படக்கூடிய பொறுப்புள்ளவன் என்பதை அல்குர்ஆன் வலியுறுத்தியுள்ளது:

*"மனிதனுக்கு, அவன் முற்படுத்தியவை பிற்படுத்தியவை பற்றி மறுமையில் அறிவிக்கப்படும். ஆயினும், மனிதன் தன் மீது பார்வையுடையவனாக இருப்பான். (தனது குற்றங்களை மறைப்பதற்காக) அவன் எந்த நியாயப்படுத்தல்களை முன்வைத்த போதிலும் அவை ஏற்றுக்கொள்ளப்படா"* [6]

## சுதந்திரத்தின் ஆரம்பம்

அறியாமை, மூடக்கொள்கை, குழப்பம் போன்றவற்றிலிருந்து பாதுகாப்பை வழங்கிய மனித சமுதாயத்தின் விடுதலை வீரர் முஹம்மத் (ஸல்) அவர்கள், வாழ்வின் அனைத்துத் துறைகளையும் மனித சமுதாயத்துக்குக் கற்றுக் கொடுத்துள்ளார்கள். அந்த அறிவின் மூலமாக, சுதந்திரமுள்ளவர்களாக வாழ்வது எப்படி என்பதையும், சுதந்திரத்தை எவ்வாறு வாழ்வில் பிரயோகிப்பது என்பதையும் மனிதர்கள் அறிந்து கொள்ள முடியும். மேலும், சுதந்திரம் என்பது அனைவருக்குமுரிய பொதுச் சொத்து என்பதையும் விளங்கிக் கொள்ள முடியும்.

ஏனெனில், நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: *“மனிதர்கள், சீப்பின் பற்களைப் போன்று சமத்துவமானவர்கள்”*[7]

மேலும் கூறியுள்ளார்கள்: *“உங்களில் ஒருவர், தனக்கு விரும்புவதை தன் சகோதரனுக்கும் விரும்பும் வரை உண்மை முஃமினாக மாட்டார்”*[8]

இக்கூற்றை ஹஸ்ரத் அலி (ரழி) அவர்களின் பின்வரும் பொன்மொழி இவ்வாறு வலியுறுத்துகின்றது: “எனது மகனே! உனக்கும் பிற மனிதர்களுக்குமிடையில் தராசாக நீ இரு; உனக்காக எதை விரும்புகின்றாயோ அதை பிறருக்காகவும் விரும்பு; உனக்காக எதை வெறுக்கின்றாயோ அதை பிறருக்காகவும் வெறு”

ஒருவன், சுதந்திரத்தை விரும்பும் மனிதனாக இருந்தால், சுதந்திரம் என்பது அனைவருக்கும் உரியது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அதுமட்டுமன்றி, பிறரது சுதந்திரத்தையும் அவன் விரும்ப வேண்டும். அவர்களது சுதந்திரத்தை மதித்து அவர்களது நல்ல எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்ய முனைய வேண்டும். சுதந்திரம் என்பது அனைவருக்குமுரிய பொதுநிலையில் உள்ளதாகையால், பிறரை சிரமப்படுத்துவது அவனுக்குக் கூடாது. அதேபோல், சுதந்திரத்தை அவன் மாத்திரம் அனுபவித்துக் கொண்டு பிறருக்கு அதனைத் தடுப்பதும் கூடாது.

தனிமனிதனின் சுதந்திரம், ஒரு சமூகத்தினுடைய சுதந்திரத்தின் ஒரு பகுதியாகும். அச்சமூகத்திலுள்ள ஒரு தனிமனிதனுக்கு சிந்திப்பதற்கும் கருத்தை வெளிப்படுத்துவதற்கும் உரிமையுள்ளது போலவே, மற்றவர்களும் தமது கருத்தை வெளிப்படுத்துவதற்கான உரிமையைக் கொண்டுள்ளனர். அரசியல்

வாழ்வில் பங்களிப்புச் செய்ய அவனுக்கு உரிமையுள்ளது போலவே, மற்றவர்களும் தமது பங்களிப்பை அரசியலுக்கு வழங்குவதற்கான உரிமையைக் கொண்டுள்ளனர். அவனது வாழ்க்கையுடன் தொடர்புடைய அம்சங்களைத் தெரிவு செய்வதற்கு அவனுக்கு உரிமையுள்ளது போலவே, மற்றவர்களும் தமது வாழ்க்கை அம்சங்களைத் தெரிவு செய்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளனர்.

குழப்பங்களை ஏற்படுத்தி அநீதியான முறையில் தனது சுதந்திரத்தைப் பறிக்க பிறர் முனையும் போது, அதை எதிர்த்துப் போரிடுவது ஒவ்வொரு மனிதனுக்கும் கடமையாக உள்ளது போலவே, மற்றவர்களது உரிமைகளை அநீதியிலும் குழப்பத்திலுமிருந்து பாதுகாப்பதும் அவனுக்குக் கடமையாகும்.

வரையறுத்து விதிக்கப்பட்டுள்ள பிறருடைய சுதந்திரத்தில் தலையிடுவதென்பது, அவர்களது மனிதத்துவத்தையும் உள்ளுணர்வுகளையும் நசுக்கும் செயலாகும். தனிமனிதனின் பிரத்தியேக சுதந்திரமானது, பிறரது சுதந்திரத்தை மதித்து நடப்பதிலிருந்து ஆரம்பிக்கின்றது. ஆணவம் நிரம்பிய செயற்பாடுகள், சுதந்திரத்தையும் பிறரது வாழ்வுரிமைகளையும் வெகுவாகப் பாதிப்பவையாகும். அதிகமான நேரங்களில் ஆணவத்திற்கு அடிமைப்பட்டவனாகவே மனிதன் மாறிவிடுகின்றான்.

## சுதந்திரமும் ஒழுங்கும்

தனித்தனி மனிதர்களின் கூட்டிணைப்பே மனித சமுதாயமாகும். மனிதர்களுக்கு பல்வேறு வகையான ஆசைகளும் எதிர்பார்ப்புகளும் உணர்வுகளும் உள்ளன. சிலவேளைகளில் முரண்பாடான எண்ணங்களும் தோன்றுகின்றன. பல்வேறு துறை சார்ந்த சிந்தனைகளும் கருத்துகளும் எழுகின்றன.

மனித ஆன்மா, பலதரப்பட்ட இச்சைகளையும் துடுப்புகளையும் கொள்கைகளையும் சுமந்துள்ளது. இவ்வியல்பின் கோணத்தில் மனிதர்கள் அனைவரும் ஒரே சமுதாயமாக இணைந்துள்ளனர். எனவே, பரஸ்பர தொடர்பின்றி எவ்வாறு அனைவரும் தமது சுதந்திரத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்! பரஸ்பர ஒத்துழைப்பின்றி எவ்வாறு தமது நன்மைகளையும் மனிதத்துவ இலக்குகளையும் பரிமாறிக் கொள்ள முடியும்! பரஸ்பர புரிந்துணர்வின்றி எவ்வாறு தமது ஆசைகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள முடியும்!

சுதந்திரம், எவ்வித ஒழுங்கோ கோட்பாடோ இன்றி அதன் போக்கில் விடப்படுமானால், மனித வாழ்க்கை மிருகத்தனமான நிலைக்குத் திரும்பிவிடும். அப்போது அங்கே சுதந்திரம் இருக்காது. சுதந்திரம் என்ற போர்வையில் கொடுமைகளும் அடக்குமுறைகளும் நிறைந்துவிடும். சர்வாதிகாரமான அநீதியான கொடுங்கோன்மை அரசோச்சும். சுதந்திரத்தை ஒழுங்குபடுத்துவது, அதற்கான கோட்பாடாகும். நல்ல கோட்பாட்டை மதித்துப் பின்பற்றுவதே சுதந்திரத்தைப் பாதுகாப்பதாக அமையும்.

பொருளாதார சுதந்திரம் மனித வாழ்க்கையில் இன்றியமையாதது. எனினும், அதற்கு எல்லைகள் வகுக்கப்பட்டு, அனைவருடைய நன்மைகளையும் பாதுகாக்கும் படியான ஒழுங்கிலமைந்த சட்டக்கோவைகள் பேணப்படுவது அவசியமாகும். இல்லையெனில் செல்வங்கள், வர்த்தக நிலையங்கள், மற்றும் பொருளாதார மையங்களிலான செல்வந்தர்களின் ஆதிக்கமும், ஏழைகள் தொடர்ந்தும் வறுமையிலும் நெருக்கடியிலும் பீடையிலும் இறுகிக் கிடக்கும் வரண்ட நிலையுமே பிரதிபலனாகக் கிடைக்கும். செல்வந்தர்கள், தமது பொருளாதாரச் செழிப்பினூடாக அரசியலிலும் சட்ட அமுலாக்கத்திலும் ஆதிக்கம் செலுத்துவார்கள். இதன் விளைவு, அரசியல் சுதந்திரமானது, சர்வாதிகார அரசியலாக

மாற்றமடைகின்ற சமூக முரண்பாடான நிலை தோற்றுவிக்கப்படும்.

மனிதனுடைய ஆணவத்திற்கும் ஆசைகளுக்கும் முன்னால், எவ்வித கட்டுப்பாடோ ஒழுங்கோ இன்றி அவனது சுதந்திரம் திறந்து விடப்படுமானால், மிகப்பெரும் சீர்கேடு தோற்றம் பெற்று, அது அந்த சுதந்திரத்தையே அழித்துத் துவம்சம் செய்துவிடும். சுதந்திரம் தவறாகப் பிரயோகிக்கப்பட்டு, சிலர் சிலரை கொடுமைப்படுத்தும் ஆதிக்க வெறியாட்டம் தலைதூக்கும்.

எனவே, நேர்மையான வாழ்வொழுங்கைக் கடைப்பிடிப்பதும், அனைவருடைய நன்மைகளையும் உரிமைகளையும் பாதுகாக்கும் சட்டக்கோவைகளை மதித்து நடப்பதும் மனிதர்கள் அனைவருடையவும் கடமையாகும். சுதந்திரம், கொடுங்கோன்மையாகவோ, பிறர் மீதான அடக்குமுறையாகவோ, சிந்தனையையும் கலாசாரத்தையும் சமூகத்தையும் பாழாக்கும் பிற்போக்காகவோ மாற்றமடையாது தடுக்கப்படுவதற்கான பாதுகாப்பு வழிமுறை இதுவேயாகும்.

சிந்தனைச் சுதந்திரம் என்பது அனைவருக்குமுரிய உரிமையாகும். நூல்களை எழுதுபவன், அவற்றைத் தொகுப்பவன், அறிவார்ந்த ஆய்வில் ஈடுபடுபவன், கருத்துரைப்பவன் மற்றுமுண்டான அனைவருக்கும் சிந்தனை, ஆய்வு, தொகுப்பு, பேச்சு முதலான சுதந்திரங்கள் உள்ளன. அவர்கள், தமது சுதந்திரத்தை, தீய சிந்தனைகளையும் நல்லொழுக்க சட்டக்கோவைகளுக்கு முரண்பாடான கருத்துகளையும் பரப்புவதிலும், சமூகத்தின் மத்தியில் பிரச்சினைகளையும் குழப்பங்களையும் தோற்றுவிப்பதிலும், மூடக் கொள்கைகளுக்கும் ஆதிக்கக் கொடுங்கோன்மைகளுக்கும் வலுச்சேர்ப்பதிலும் ஈடுபடுத்தாதிருப்பது அவசியமாகும். அத்தோடு, அவர்கள் பிறரது சுதந்திரத்தையும் மதித்து நடக்க வேண்டும்.

ஒரு பொருளை விற்பவருக்கும் வாங்குபவருக்கும் அதனை விற்பதற்கும் வாங்குவதற்குமான சுதந்திரம் உள்ளது. எனினும், அதிக இலாபத்தை நோக்காகக் கொண்டு, அப்பொருளைப் பதுக்கிவைப்பதற்கோ, பிறரைப் பாதிக்கும் வகையில் விலையை உயர்த்தி விற்பனை செய்வதற்கோ, அல்லது மனிதர்களுடைய அன்றாடத் தேவைகளுக்குக் கிடைக்காத வகையில் அவற்றைத் தடுத்து வைப்பதற்கோ எவருக்கும் உரிமையில்லை.

வரையறையற்ற பொருளாதார சுதந்திரமானது, உலகின் பல பாகங்களிலுமுள்ள மக்கள், வறுமையிலும் பீடையிலும் நோய்

*நொடியிலும் வாடி வதங்கிக் கொண்டிருக்கும் போது, சில பகுதிகளிலுள்ள மக்கள் பதுக்கலான பொருள்முதல்வாத ஏகாதிபத்திய நிலையில் மிதக்கும் முரண்பாடான வாழ்க்கைச் சூத்திரத்தைத் தோற்றுவித்து, உலகின் சமத்துவத்தையும் நியாயாதிக்கத்தையும் தகர்த்து நிர்மூலமாக்கிவிடும்.*

# அறிவும் சுதந்திரமும்

அறிவு, புத்தி, இறைவனால் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கம் என்பன மனித வாழ்க்கையின் இன்றியமையாத் தூண்களாகும். இவையே மனித வாழ்வின் யதார்த்தங்களையும், பயன்பாடானதும் பாதிப்பானதுமான இலௌகீக அம்சங்களின் விளக்கங்களையும் உறுதிப்படுத்துகின்ற கருவிகளாகும். இவையே தனிமனித வாழ்க்கையுடன் தொடர்புடைய உணவு, குடிப்பு, ஒழுக்கம் போன்ற அம்சங்களையும், கூட்டு வாழ்க்கையுடன் தொடர்புடைய திருமணம், குடும்பம், சமூகம் போன்ற அம்சங்களையும், பொதுவாழ்க்கையுடன் தொடர்புடைய அரசியல், சமூகவியல், பொருளியல் போன்ற அம்சங்களையும் நெறிப்படுத்துகின்ற சட்டவரம்புகளாகும்.

மனிதன், வாழ்க்கை பற்றிய எவ்வித அறிவுமற்றவனாகவே உலகில் பிறக்கின்றான். தனக்குப் பயன்தருவது எது, தன்னைப் பாதிப்புக்குள்ளாக்குவது எது என்பது பற்றியெல்லாம் அவனுக்கு எதுவும் தெரியாது. எனினும், மருத்துவம், இரசாயனவியல், சமூகவியல், பொருளியல் உள்ளிட்ட பல்வேறு துறைசார் நிபுணர்களினது அறிவியல் கண்டுபிடிப்புகளினூடாக அவை பற்றிய அறிவை அவன் பெற்றுக் கொள்கின்றான். அல்லது, நாளாந்த வாழ்வனுபவங்களினூடாகக் கிடைக்கும் அறிவின் மூலம் தெளிவுமிக்க புத்தியை அடைந்து கொள்கின்றான். அந்த புத்தி உலகில் நல்லவற்றையும் தீயவற்றையும் அவனுக்குப் பிரித்துணர்த்தி விளக்குகின்றது.

மனிதன் உணவு, குடிப்பு, பாலுணர்வு முதலான பல்வேறு தேவைகளுடையவனாவான். அவனது ஆசைகளும் உணர்வுகளும் கடினமான மனோ இயல்புகளும் அத்தேவைகளை அடைந்து கொள்வதன் பால் அவனை நிர்ப்பந்திக்கின்றன. சிலரது உள்ளங்களில் புகைத்தல், மதுபாவனை, சூதாட்டம், பாலியல் சேஷ்டைகள் முதலிய தீய விடயங்கள் மீதான ஆசை மிகைத்திருக்கும். அவற்றை அடைவதற்கான முயற்சியின் பால் அவர்களது தேவைகள் அவர்களைத் தூண்டிவிடும்.

வேறு சிலர், பிறரை நசுக்குவதிலும் அவர்களை அடிமையாக்கிக் கொள்வதிலும் அவர்களது பொருளாதாரங்களை சூறையாடி தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதிலும் விருப்பமுடையோராயிருப்பர். வேறு சிலர் இவற்றுக்கெல்லாம் முரணாக நல்லுணர்வுகளும் அனைவருக்கும் பயன்பாடான விருப்பங்களும் உடையோராயிருப்பர். அவரவரது இயல்புக்கும்

உணர்வுக்கும் ஏற்ப அவரவரது ஆசைகளும் தேவைகளும் முரண்படுவது உலகின் இயல்பாகும்.

மனிதனுடைய இச்சை, ஆடம்பர மோகம் என்பனவே தவறான வழிகளில் மனிதனை இட்டுச் செல்கின்றன; தத்தமது துறைகளிலான எல்லை மீறல்களுக்கும் தவறுகளுக்கும் வழிவகுக்கின்றன.

இத்தகைய தனிமனித, மற்றும் கூட்டு வாழ்வில் இடர்பாடுகளைத் தோற்றுவிக்கும் சமூக விரோதச் செயல்களைச் செய்வதிலான ஆர்வம் ஒருவனுக்கு ஏற்படும் போது, அவனுக்குப் பல வழிகள் தென்படுகின்றன. தூரதிருஷ்டியுடனும் முடிவுகளை அவதானிக்கும் பார்வையுடனும் சிந்திக்கின்ற போது இரண்டு சுயவிருப்புத் தெரிவுகள் அவனுக்கு முன்னிலையில் விடப்படுகின்றன. ஒன்று, அச்செயல்களை மேற்கொள்வதற்கான தெரிவு, மற்றையது அவற்றைத் தவிர்ப்பதற்கான தெரிவு. சுதந்திரம் என்ற உணர்வின் கீழ் இத்தீய செயல்களை மேற்கொள்ளாது தவிர்ப்பானாயின் அவனே சுதந்திரம் எனும் கருத்தியலைப் பூரணப்படுத்தியவனாவான்.

மனிதன், தனக்கும் பிறருக்கும் பயனளிக்கும் விடயங்களில் தனது சுதந்திரத்தைப் பிரயோகிக்க வேண்டும். மனிதன் சிந்திப்பவை, அவனது குணவியல்புகள் தூண்டுபவை, அல்லது கட்டுப்படுத்துபவை அனைத்தும் நல்லவையாகவோ பயனுள்ளவையாகவோ இருப்பதில்லை. சுதந்திரம் என்ற உணர்வின் கீழ் ஒன்றிணைக்கப்படும் போதே அவற்றின் இயல்பூக்கங்கள் நெறிப்படுத்தப்படுகின்றன.

அறிவு, புத்தி, மார்க்கம் என்பவையே மனிதனை நேர்வழிக்கு இட்டுச்செல்லும் வழிகாட்டிகள். இவை தவிர்ந்த ஏனையவற்றினால் மனிதன் இருளும் அழிவும் நிரம்பிய ஒரு பாதையையே அடைந்து கொள்கின்றான். அச்சமயத்தில் தனது வாழ்க்கைப் பாதையை விளங்கிக் கொள்ள முடியாமலும், நன்மை-தீமைகளையும் பயனுள்ளவை-பாதிப்புள்ளவைகளையும் பிரித்துணர முடியாமலும் அவன் தடுமாற்றமுறுகின்றான்.

இச்சைகளின் பின்னால் இழுபட்டுச் செல்வதும், மது போதை வஸ்துகளை பிறரது எவ்வித தலையீடுமின்றி பாவிப்பதும் ஒரு மனிதனின் சுதந்திரமாகிவிடாது. உண்மையான சுதந்திரம் என்பது, அவனது உயிருக்கும் உடலுக்கும் எல்லா வகையிலும் பயனளிப்பதாகவும், அவனது நோய்களைக் குணப்படுத்துவதாகவும், சமூகத்தில் அவனது பிரபல்யத்தை

*உயர்த்துவதாகவும், குற்றச்செயல்களில் விழுந்து விடாமல் அவனைப் பாதுகாப்பதாகவும் அமைந்திருக்க வேண்டும். இவ்வாறான தீங்குகளிலிருந்து மனிதனைப் பாதுகாக்கும் நடைமுறையே அறிவும் புத்தியும் மார்க்கமும் வரையறுத்துள்ள நடைமுறையாகும். இச்சைகள் உணர்ச்சிகள் அன்றி, இம்மூன்று அம்சங்களுமே மனித வாழ்வை சிறப்பாக ஒழுங்கமைக்கும் உயர்ந்த சாதனங்களாக இருக்கின்றன.*

*மனித அறிவின் குறுகிய வரையறைக்கு எட்டாத பல்வேறு விடயங்களை இஸ்லாம் - மனிதனின் பயன் கருதி - விதித்துள்ளது. எனினும், அவற்றின் ஆழ அகலங்களை விளங்கிக் கொள்வதிலான முயற்சியில் மனிதன் தோல்வியடைந்து விடுவது அவனது அறிவின் பலவீனத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. அல்குர்ஆன் கூறுகின்றது: "நீங்கள் விரும்பும் ஒரு விடயம் உங்களுக்கு கெட்டதாக இருக்கக்கூடும்; நீங்கள் வெறுக்கும் ஒரு விடயம் உங்களுக்கு நல்லதாக இருக்கக்கூடும்"*

## சுதந்திரத்தின் பிரயோகம்

*சுதந்திரம் தவறான வழியில் பிரயோகிக்கப்படும் போது, இள வயது ஆண் பெண்களைக் கூட அது பாரியளவில் பாதித்து, நோய்களையும் குற்றங்களையும் குழப்பங்களையும் சமூகத்திடையே தோற்றுவித்து விடுகின்றது. போதைவஸ்து பாவனை, பாலியல் சீர்கேடுகள் தலைதூக்குகின்றன. அவற்றின் பிரதிபலனாக எயிட்ஸ் முதலான பெரும் நோய்களும், கொலை, கொள்ளை, கற்பழிப்புகளும், பிற குற்றச் செயல்களும் அதிகரித்து சமூகத்தை முற்றாக நாசம் செய்து விடுகின்றன.*

*சுதந்திரமும் நாகரிகமும் முதிர்ச்சியடைந்த நாடாகப் பிரகடனப்படுத்தப்படும் பிரான்ஸில் ஏழு மில்லியன் மக்கள் போதை வஸ்துக்கு அடிமையாகியுள்ளனர் என்றும், அங்கு ஹெரோயின் முதலான போதைவஸ்துகளைப் பாவிப்பவர்களில் பெரும்பான்மையானோர் பதினைந்து வயதுக்கும் இருபது வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்கள் என்றும் அந்நாட்டு புள்ளிவிபரமொன்று கூறுகின்றது. மேலும், எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களில் 28% ஆனோர் தொடர்ச்சியாக போதைவஸ்துகளைப் பாவிப்போர் என்றும், 22% ஆனோர் எயிட்ஸ் வைரஸ் காவிகளாக உலவுகின்றனர் என்றும் ஓர் அறிக்கை குறிப்பிடுகின்றது.*

*பிரித்தானியாவில் 2004ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் மூலம், அங்கு பருவ வயதை அடைந்தவர்களில் நான்கிலொரு பகுதியினர் மதுபாவனைக்கு முழுக்க அடிமையாகியுள்ளனர் என்பது தெரிய வந்தது. அதேவேளை, அண்மைய கணக்கெடுப்பின் பிரகாரம், உலகில் 30 மில்லியன் மக்கள் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்; 46 மில்லியன் மக்கள் எயிட்ஸ் வைரஸின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது. சுதந்திரம், வரையறைகளும் கட்டுப்பாடுகளுமற்று முற்றாகத் திறந்து விடப்படும் போது ஏற்படும் பின்விளைவு என்று இந்நிலைகளைக் கூறலாம். அல்லது சுதந்திரம் என்ற எண்ணக் கருவின் தவறான புரிதலும், அதற்கேற்ற செயற்பாடும் விளைவித்துள்ள நாசம் என்றும் குறிப்பிடலாம்.*

*இது ஒரு புறமிருக்க, பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு வழங்கப்படும் அளவுக்கு மீறிய சுதந்திரமானது சமூகத்தில் பல்வேறு நோய்களையும் சீரழிவுகளையும் தோற்றுவிக்கின்றது. அமெரிக்க உளவுத்துறை வெளியிட்ட தகவலின் பிரகாரம், வருடந்தோறும் அமெரிக்காவுக்கு 50,000 பெண்களும்*

*சிறுவர்களும் அழைத்து வரப்படுவதாகவும், பாலியல் சீர்கேடுகளைத் தோற்றுவிக்கும் விளையாட்டுகளிலும் வர்த்தகங்களிலும் அவர்கள் ஈடுபடுத்தப்படுவதாகவும் தெரியவந்துள்ளது. 2003, 2004 ஆகிய இரு ஆண்டு காலப்பகுதிகளிலும் சுமார் 100,000 பெண்களும் சிறுவர்களும் அமெரிக்காவுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். குழந்தை வளர்ப்பு, அலுவலக நிர்வாகம், கூலித்தொழில் முதலான வேலைகளின் பெயர்களில் அவர்கள் அழைத்துவரப்பட்டாலும், பெரும்பாலும் பாலியல் சீர்கேடுகளுக்கே அவர்கள் அதிகம் பயன்படுத்தப்படுவதாகவும் அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் அமெரிக்காவின் வெளியுறவுத்துறைப் பொறுப்பாளரான ஹரோலன்ட், "சர்வதேச குற்றவாளிகள், தற்போது ஆயுதங்களையும் போதைவஸ்துகளையும் வியாபாரம் செய்வதை விட்டுவிட்டு வெள்ளை அடிமைகளை விற்பதை தமக்கு அதிக இலாபம் தரும் வர்த்தகமாக ஆக்கிக் கொண்டுள்ளனர்" எனக் கூறுகின்றார்.*

*உலகச் சந்தைகளில் சுமார் 2 மில்லியன் பெண்கள் இவ்வாறான பாலியல் குற்றச் செயல்களின் பால் நிர்ப்பந்திக்கப்பட்டு விற்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.*

*ஐ.நா. சபையின் தென்கிழக்கு விவகாரங்களுக்கான கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஸாம் பரூன் பேக் இவ்வாறு கூறுகின்றார்: "பெண்களும் சிறுவர்களும் விற்கப்படுவது, தற்கால உலகின் அடிமைத்தளைக்கு சிறந்த ஆதாரமாகும்"*

*பெண்களுக்கான சுதந்திரம், சிறுவர்களுக்கான சுதந்திரம் என்ற போர்வைகளில் நிகழும் மனித சமூகத் துரோகமே இத்தகைய செயல்களுக்குக் காரணமாயமைகின்றது. சுதந்திரம் என்பது அனைவருக்கும் பொதுவானதெனினும், அவற்றின் பிரயோகம் என்பது ஒவ்வொருவரது இயல்புக்கும் தன்மைக்கும் ஏற்ப நெகிழும் பண்பினைக் கொண்டுள்ளது. உலகில் நடைபெறுகின்ற பெண்கள் மீதான பலாத்காரங்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் அனைத்தும் சுதந்திரம் தவறாகப் பிரயோகிக்கப்படுவதன் பிரதிகூலங்களாக எழுகின்ற பாதிப்பு நிலைகளாகும். எனவே, சுதந்திரம் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் எவ்வளவு அவசியமானதோ, அதை விட அவசியமானது, அதனை உரிய முறையில் பிரயோகிப்பதாகும். ஏனெனில், சுதந்திரம் மறுக்கப்படுவதன் மூலமான பாதிப்பை விட, அதன் தவறான பிரயோகத்தின் மூலமான பாதிப்பு மிகப்*

பாரியதாகும் என்பதை மேற்கண்ட தரவுகள் தெளிவாக வலியுறுத்துகின்றன.

## சுதந்திரத்தைப் பாதிப்பவை

ஒரு மனிதன் சுதந்திரமுள்ளவனாக இருக்க வேண்டுமெனில், அவனது செயலும் நிலைப்பாடும் அவனது சுயவிருப்பினதும் சுயதெரிவினதும் அடிப்படையில் உருவானவையாக இருக்க வேண்டும். அவன் மேற்கொள்ள விரும்பும் எந்த செயலைப் பற்றியும் முதலில் அவன் சிந்திக்க வேண்டும். அதனுடைய பயன்பாடுகளையும் பாதிப்புகளையும் சிந்தித்துணர்ந்து, பாதிப்புள்ளவற்றை நிராகரித்து பயன்பாடுள்ளவற்றைத் தெரிவு செய்ய வேண்டும்.

ஆன்மாவின் உள்ளே நடைபெறும் போராட்டத்தில், இச்சைகள் சுவைகள் என்பன ஒரு புறம் நிற்க, புத்தி அதற்கு எதிர்ப்புறம் நிற்கின்றது. பெரும்பாலான நேரங்களில் புத்தியைத் தோற்கடித்து இச்சைகள், சுவைகள் என்பன வெற்றிபெற்று விடுகின்றன.

இத்தகைய நிலையின் போது, மனிதன் தனது சுயவிருப்பும் சுதந்திரமும் பறிக்கப்பட்டவனாக ஆகிவிடுகின்றான். ஏனெனில், இச்சைகளும் பாதிப்பை ஏற்படுத்தும் இன்பங்களும் அவனில் ஆதிக்கம் செலுத்தி, அவனது இயல்பான உணர்வுகளை வென்று விடுகின்றன. ஓர் சர்வாதிகாரியின் அநீதியான ஆட்சியைப் போல், அல்லது பிறரை ஏமாற்றி உரிமைகளைத் தடுக்கும் கொடுங்கோன்மையாளனைப் போல் அவை நடந்து கொள்கின்றன.

இந்நிலையில் மனிதன் கடினமான செயலூக்கத்தையும் கோபத்தையும் திணிக்கும் முரண்பாடான நிலைக்கு முகங்கொடுக்கின்றான். அவ்வேளையில் சில மனிதர்கள், உத்வேகம் பெற்று கோபம் கொண்டு இயல்புக்கு முரணான செயல்களை மேற்கொள்ளத் துணிவர். கோபமும் இயற்கைக்கு ஒவ்வாத செயற்பாடுகளும் அவர்களது புத்தியை மழுங்கடித்து அவர்களது சுயஅவதானிப்புக்கு விடுமுறையிட்டுவிடும். இதனால், அவர்கள் பிறரைப் பாதிக்கும் செயல்களில் மட்டுமன்றி, பல்வேறு குற்றச் செயல்களிலும் ஈடுபடுவர். கடினமான ஆரோக்கியமற்ற வார்த்தைப் பிரயோகங்கள் அவர்களில் வெளிப்படும். நற்செயல்களிலான ஆர்வம் தீர்ந்து விடும். ஆபத்து மிக்க தோற்ற வெளிப்பாட்டை தமது செயல்களிலும் சிந்தனைகளிலும் அவர்கள் புகுத்துவர். இவ்வாறான பண்புகளுக்கு பணிந்து விடுகின்ற போது, மனிதர்கள் தமது சுயவிருப்பு, அறிவு, சுதந்திரம்

*அனைத்தையும் இழந்துவிடுவர். இத்தகைய பண்புகள் மனிதர்களது சுதந்திரத்தைப் பாதிக்கும் அம்சங்களாகும்.*

*இவற்றோடு, மனிதர்களது சுதந்திரத்தைப் பாதிக்கும் பிறிதொரு அம்சமும் இருக்கிறது. அது ஒவ்வொரு மனிதனுடனும் இணைந்து கொள்கின்ற தீய நண்பர்கள். இவ்வகை நண்பர்கள், தாம் கடைப்பிடித்து வரும் போதை வஸ்து பாவனை, தீய பாலியல் சேஷ்டைகள், மற்றுமுண்டான பாவச்செயல்களை மேற்கொள்ளும் படியாக அம்மனிதனை வற்புறுத்துவர். தமது நட்பை முன்னிறுத்தி இவற்றைச் செய்வதற்கான அழுத்தத்தை அவனுக்கு வழங்குவர். இந்நிலையில் அம்மனிதன் தனது சுதந்திரத்தையும் சுயவிருப்பையும் இழக்க வேண்டிய நிர்ப்பந்தம் தலைதூக்குகின்றது. அந்த தீய நண்பர்களின் முன்னால் கைதியாக இவன் மாறிவிடுகின்றான். ஏனெனில், அவர்களை இழப்பதற்கும் அவர்களை கோபப்படுத்துவதற்கும் விரும்பமாட்டான். தனது சுதந்திரத்தை விட்டுக்கொடுத்து, அவர்களது நட்பைத் தக்க வைத்துக் கொள்ள அவன் நிர்ப்பந்திக்கப்படுவான். இத்தகைய தீய நண்பர்களைத்தான் அல்குர்ஆன் 'மனித ஷைத்தான்கள்' எனும் சொல்லில் குறித்துரைக்கின்றது. அவர்கள், பிற மனிதர்களை ஏமாற்றுவார்கள்; அவர்களது சுதந்திரத்தையும் சுயவிருப்பையும் பறித்து தமது விருப்பத்தை அவர்களில் திணிப்பார்கள்; தாம் வழக்கத்தில் கொண்டுள்ள குற்றச் செயல்களைப் புரியும்படியாக அவர்களை வற்புறுத்துவார்கள்.*

*புனித அல்குர்ஆன், இத்தகைய மனித ஷைத்தான்களிடமிருந்து எச்சரிக்கையுடனிருக்குமாறு மனித சமூகத்தை உசுப்புகின்றது. இம்மனித ஷைத்தான்கள், சமுதாயத்தை எவ்வாறு வழிகெடுக்கின்றன, எவ்வாறு ஏமாற்றுகின்றன என்பதை விளக்கிக் கூறுகின்றது.*

*"(ஷைத்தானாகிய) அவன், அவர்களுக்கு வாக்களிக்கின்றான்; அவர்களுக்கு வீணான ஆசைகளையும் ஊட்டுகின்றான்; ஆனால், அந்த ஷைத்தான் வாக்களிப்பதெல்லாம் வெறும் ஏமாற்றமே"* [10]

*"இவ்வாறே, ஒவ்வொரு நபிக்கும் மனிதரிலும் ஜின்களிலும் உள்ள ஷைத்தான்களை விரோதியாக நாம் ஆக்கியிருந்தோம். அவர்களில் சிலர் சிலருக்கு அலங்காரமான கூற்றுகளை, ஏமாற்றுவதற்காக இரகசியமாக அறிவிக்கின்றனர். மேலும், உம்முடைய இரட்சகன் நாடியிருந்தால் இவ்வாறு அவர்கள் செய்திருக்கமாட்டார்கள். ஆகவே, (நபியே!) நீர் அவர்களையும்*

அவர்கள் கற்பனை செய்து கொண்டிருப்பவைகளையும் விட்டுவிடுவீராக!

"மறுமையை நம்பாதோரின் இதயங்கள் அதற்குச் செவிசாய்ப்பதற்காகவும், அதனை அவர்கள் பொருந்திக் கொள்வதற்காகவும், அவர்கள் எதைச் செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்களோ அதனை அவர்கள் செய்வதற்காகவுமே இவ்வாறு செய்கின்றனர்" [11]

புனித அல்குர்ஆன் பிறிதோர் இடத்தில், நெறி முறை தவறி நடக்கும் ஒரு மனிதனுடைய சுய விருப்பின் மீதான ஷைத்தானின் ஆதிக்கத்தைப் பற்றிப் பேசுகின்றது. அவ்வாறே, ஒவ்வொரு விடயத்தையும் அதன் இறுதி வரை சிந்தித்து, தமது அறிவின் படி செயல் புரிந்து, ஈமானின் ஒளியினால் நேர்வழி பெறுகின்ற மனிதர்களைப் பற்றிப் பேசும் அல்குர்ஆன், அத்தகைய மனிதர்கள் மீது ஷைத்தானுக்கு எவ்வித அதிகாரமோ ஆதிக்கமோ கிடையாதென உறுதிப்படுத்துகின்றது. அத்தகைய மனிதர்களே தமது சிந்தனைக்கேற்றாற் போல் செயல் புரியும் சுதந்திரமுள்ளவர்கள் எனவும் அல்குர்ஆன் கூறுகின்றது. இது பற்றிய அல்குர்ஆனின் வசனமானது;

"(நபியே!) நீர் குர்ஆனை ஓத ஆரம்பித்தால், எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் காவல் தேடிக் கொள்வீராக. நிச்சயமாக விசுவாசங் கொண்டு, தங்கள் இரட்சகனின் மீது நம்பிக்கை வைத்துள்ளவர்களின் மீது அந்த ஷைத்தானுக்கு எவ்வித அதிகாரமுமில்லை. அவனுடைய அதிகாரமெல்லாம், அவனை நண்பனாக எடுத்துக் கொண்டவர்கள் மீதும், அவனால் அல்லாஹ்வுக்கு இணைவைத்துக் கொண்டிருப்பவர்கள் மீதும்தான்"[12]

"தீர்ப்புக் கூறப்பட்ட பின்னர், ஷைத்தான், அம்மனிதர்களைப் பார்த்துக் கூறுவான்: 'நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு உண்மையான வாக்குறுதியளித்திருந்தான். நானோ உங்களுக்குப் பொய்யாக வாக்குறுதியளித்தேன். ஆனால், நான் மாறுசெய்தேன். நான் உங்களை அழைத்தேன்; நீங்கள் எனக்கு பதிலளித்தீர்கள் என்பதைத் தவிர எனக்கு யாதோர் அதிகாரமும் உங்கள் மீது இல்லை. ஆதலால், நீங்கள் என்னைப் பழிக்காதீர்கள்; உங்களையே நீங்கள் பழித்துக் கொள்ளுங்கள்...."[13]

"நிச்சயமாக, வழிகெட்டு உன்னைப் பின்பற்றியவர்களைத் தவிர, ஏனைய என்னுடைய அடியார்கள் எவர் மீதும் உனக்கு

*யாதொரு அதிகாரமுமில்லை. (என அல்லாஹ் ஷைத்தானிடம் கூறினான்)”*[4]

புனித அல்குர்ஆன், சுதந்திரம் என்பதன் எண்ணக்கருவைத் தெளிவுபடுத்துவதற்காக முழுமையான விளக்கத்தை மனிதர்களுக்கு வழங்குகின்றது. சுயபுத்தி, அவதானிப்பு, தான் செய்த செய்யாது தவிர்த்த விடயங்களைப் பற்றிய நுட்பமான ஒப்புநோக்கு என்பவற்றின் மீது கட்டியெழுப்பப்பட்டதாக ஒவ்வொரு மனிதனுடையவும் சுயவிருப்பு அமைந்திருக்க வேண்டும் என அது எதிர்பார்க்கின்றது.

இதனால், தமது அறிவினூடாக செயல் புரியாதவர்களையும், நன்மை-தீமைகள், பயன்பாடுகள்-பாதிப்புகள் என்பவற்றை பிரித்துணர முடியாதவர்களையும் அது கண்டிக்கின்றது. அவர்கள் மிருகங்களைப் போன்றவர்கள் என இழித்துரைக்கின்றது. தமது புத்தி, அவதானிப்பு என்பவற்றிற்கான ஸ்தானத்தைத் தவற விடுகின்ற போது, அவர்கள் சுயமாக சிந்தித்து செயற்படும் ஆற்றலை இழந்து, பிறரது வார்த்தைகளிலும் இழுப்புகளிலும் கட்டுண்டு கிடக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். அதனையே தமது வாழ்க்கைக்குப் பொருத்தமானதெனவும் வரித்துக் கொள்கின்றார்கள். இந்நிலையில் அவர்கள் மிருகங்களை விடவும் கேடுகெட்ட நிலைக்காளாகி விடுகின்றார்கள். இவ்வாறு, தமது புத்தியினால் பயன்பெறாதிருப்பவர்களைப் பற்றி அல்குர்ஆன் இவ்வாறு குறித்துரைக்கின்றது;

*“நிச்சயமாக ஜின்களிலும் மனிதர்களிலும் அநேகரை நரகத்திற்காகவே நாம் படைத்திருக்கிறோம். அவர்களுக்கு இதயங்களிருக்கின்றன; அவற்றினால், அவர்கள் விளங்கிக் கொள்ளமாட்டார்கள். அவர்களுக்கு கண்களிருக்கின்றன; அவற்றினால் அவர்கள் பார்க்கமாட்டார்கள். அவர்களுக்கு காதுகளிருக்கின்றன; அவற்றினால் அவர்கள் செவியுறமாட்டார்கள். அவர்கள் கால்நடைகளைப் போன்றவர்கள். ஏன், அவற்றை விடவும் கேடுகெட்டவர்கள். அவர்களேதாம், (நமது அத்தாட்சிகளைப்) புறக்கணிப்பவர்கள்”*[5]

இவ்வசனத்தின் கருத்து, அவர்கள் புத்தி, அவதானிப்பு எனும் அடிப்படைகள் மீது கட்டியெழுப்பப்பட வேண்டிய தமது அறிவு, பார்வை, செவிப்புலன், சுயவிருப்பு, தெரிவு என்பவற்றுக்கு விடுமுறை கொடுத்து விடுகின்றார்கள். இச்சைகளுக்கும் தீய செயல்களுக்கும் பின்னால் விலங்குகளைப் போன்று இழுபட்டுச் செல்கின்றார்கள். அவையே அவர்களது நடைமுறைகளைக்

*கட்டுப்படுத்துகின்றன. தவறான பாதைக்கு இட்டுச் செல்கின்றன. சுயஅறிவு, பேணுதல், பொறுப்புணர்ச்சி, எதிர்காலம் பற்றிய சிந்தனை என்பவை அவர்களை விட்டும் அகன்று விடுகின்றன.*

*நபி (ஸல்) அவர்கள், இந்நிலையை வெறுத்தார்கள். அது கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டியதென வலியுறுத்தினார்கள். எப்போதும் சிந்தித்துச் செயற்படும் படியும், ஒரு விடயத்தை செய்யுமுன் அதன் முடிவு பற்றி ஆழமாக விளங்கிக் கொள்ளும் படியும், புத்தியை அதற்கெனப் பயன்படுத்திக் கொள்ளும் படியும் பணித்துள்ளார்கள். ஏழ்மை, இச்சை, வாழ்விறுக்கம், மடமை, முடிவு பற்றிய அறியாமை, முதலான நெருக்கடிகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான வழி இதுவே எனவும் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.*

*எனவே, சுதந்திரம் என்பது அநீதியான பாதையின் பால் இட்டுச்செல்லுமானால் அது நல்லதாக இருக்க முடியாது. நல்ல நடைமுறை என்பது அறிவு, புத்தி, மார்க்கம் என்பவை வரையறுத்துள்ள நடைமுறையேயன்றி, இச்சைகள், உணர்ச்சிகள், கற்பனைகள் வரையறுத்துக் கொள்பவையல்ல. ஆசைகளுக்குக் கட்டுப்படுவதே மனிதன் தனக்கு இழைத்துக் கொள்ளும் பெரும் தீங்கும் அநீதியுமாகும்.*

## சுதந்திரமும் சீராக்கமும்

மனிதன், தனது புத்தி சார்ந்த செயற்பாடுகள் மூலமாகவும் ஒழுக்கவியல் சார்ந்த உணர்வோட்டங்கள் மூலமாகவும் விலங்குகளை விட்டும் வேறுபட்டவனாக தனித்துவம் பெற்றுத் திகழ்கின்றான். அறிவு, ஒழுக்கம் ஆகிய பாதையினூடாகவே மனிதனுடைய சமூகவியல் தொடர்புகள் கட்டியெழுப்பப்படுகின்றன. அவற்றின் மூலமாகவே, அவன் நீதி-அநீதி, அன்பு-வெறுப்பு, வாய்மை-பொய்மை, வழிகாட்டல்-வழிகெடுப்பு, மதித்தல்-அவமதித்தல், மன்னித்தல்-பழிவாங்கல், பணிவு-பெருமை, உபகாரம்-அலட்சியம் முதலான அனைத்துப் பண்புகளையும் அவற்றின் யதார்த்தத்துடன் விளங்கிக் கொள்கின்றான்.

ஒரு சமூகத்திற்கு, நல்லதும் பயன்பாடானதுமான மரபுகளும் பழக்க வழங்கங்களும் கலாசாரக் கூறுகளும் உள்ளன. மனிதன், தான் எதிர்கொள்கின்றவற்றில் தீயவற்றை அகற்றி நல்லவற்றை எடுத்துக் கொள்கின்றான்; பாதிப்பானவற்றை நீக்கி பயனுள்ளவற்றை தேர்ந்தெடுக்கின்றான். அழகிய நல்லொழுக்கப் பண்புகளைப் பேணுவது, வாழ்வையும் சமூக சீராக்கத்தையும் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்யக்கூடியதும், மனித உரிமைகளையும் கண்ணியங்களையும் பாதுகாக்கக் கூடியதுமான முக்கிய அம்சம் என்பதை தனது அறிவினூடாக விளங்கிக் கொள்கின்றான்.

மனிதன், தான் சுதந்திரமுள்ளவன் என்ற உணர்வுடன் ஒழுக்கவியல் மரபுகளுக்கு முரணாக எவ்வித வெட்கமுமற்று தனக்கு விருப்பமானவற்றையெல்லாம் செய்து, சமூக ஒழுக்க நடைமுறைகளை முற்றாகப் புறக்கணிப்பானாயின், அவன் சுதந்திரத்தைத் தவறாகப் பிரயோகித்தவனாவான். தான் சார்ந்துள்ள சமூகத்துக்கு சுதந்திரத்தின் பெயரால் பெரும் தீங்கிழைத்தவனுமாவான். ஏனெனில், இவ்வாறான செயல் மூலம் வாழ்க்கையின் ஒழுங்குகளை அவன் மீறிவிடுகின்றான். பிறருடைய உணர்வுகளுக்கும் சமூக நல்லொழுக்கப் பண்புகளுக்கும் பங்கம் விளைவிக்கின்றான். உண்மையில், சுதந்திரம் என்பதன் பொருள், ஒரு மனிதன், நல்லொழுக்கம், சமூக ஒழுங்குகள், சட்டங்கள் முதலான அனைத்தையும் புறக்கணித்துவிட்டு தான் விரும்பியவற்றையெல்லாம் செய்வது என்பதல்ல.

சுதந்திரத்தை வரையறுப்பவை அறிவு, நல்லொழுக்கம், இறைவிசுவாசம் என்பவையாகும். நல்லொழுக்கமானது,

மனிதத்துவத்தைப் பூர்த்தி செய்வதிலும் சமூக ஒழுங்கைக் கட்டியெழுப்புவதிலும் முக்கியத்துவம் மிக்கதாக விளங்குகின்றது. இதன் காரணமாகவே அது இறைத் தூதர்களது பிரசாரப் பணியில் பிரதான அங்கம் வகித்து வந்தது. முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: "நல்லொழுக்கப் பண்புகளைப் பூர்த்தி செய்யவே நான் அனுப்பப்பட்டுள்ளேன்"[6]

மேலும் கூறினார்கள்: "உங்களில் மிக நல்ல ஒழுக்கப் பண்புள்ளவரே முழுமையான இறைவிசுவாசமுள்ளவராவார்"[7]

ஒரு தீய விடயத்தை செய்ய முடியாது தாம் தடுக்கப்படுகின்ற போது, அல்லது விலக்கப்படுகின்ற போது தமது சுதந்திரம் மீறப்படுவதாக சிலர் கருதுகின்றனர். ஒருவனது பெற்றோர், குறித்த சிலருடன் நட்புறவு கொள்ள வேண்டாம் என அவனைத் தடுக்கின்ற போது, அல்லது சில பழக்க வழக்கங்களைக் கைவிடுமாறு அவனை நிர்ப்பந்திக்கின்ற போது, தனது பெற்றோர் தன் மீது அதிகாரம் செலுத்துவதாகவும் தன்னுடைய சுதந்திரத்தை அவர்கள் மறுக்க முயல்வதாகவும் அவன் எண்ணுகின்றான். சுதந்திரம் பற்றிய இந்த கருதுகோளானது முற்றிலும் தவறானதாகும்.

நல்லவற்றின் பால் வழிகாட்டுவது, தீயவற்றை செய்யவிடாது தடுப்பது முதலானவை ஒரு மனிதன் பிற மனிதனுக்கு செய்ய வேண்டிய முக்கிய கடமைகள். அவன் சிறு பராயத்திலோ, அதைத் தாண்டிய இளமை, மற்றும் முதுமைப் பருவத்திலோ இருப்பினும் சரியே. ஒருவன், பிறப்பு முதல் இறப்பு வரையான தன் வாழ்வின் அனைத்து கால கட்டங்களிலும் தனது பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்கள், சீர்திருத்தவாதிகள் முதலானோரின் உபதேசங்கள், அறிவுரைகள், வழிகாட்டல்கள் என்பவற்றின் பால் அதிக தேவையுடையவனாக இருக்கின்றான். இத்தேவையை எப்போதும் அவன் நிராகரிக்கவோ மறுக்கவோ முடியாது.

ஆனால், சிலர், தமது பெற்றோரினதும், தமக்கு வழிகாட்டும் மற்றோரினதும் உபதேசங்களையும், வழிகாட்டல்களையும் தமக்கான உரிமைகளும் சுதந்திரங்களும் பறிக்கப்படும் காரணிகளாகவும், தமது ஆளுமை விருத்தியை கட்டுப்படுத்தும் அதிகார துஷ்பிரயோகமாகவும் நோக்குகின்றனர். இது முற்றிலும் தவறும், தவறான விளக்கத்தின் மூலமான வினையுமாகும்.

## சுதந்திரத்தின் சுற்றுவட்டம்

ஒருவர், ஓர் உணவுப் பொருளை வாங்குவதற்காக சந்தைக்குச் செல்கின்றார். அங்குள்ளவற்றில் நல்ல உணவு எது, ஆரோக்கியமானது எது என்று சிந்திக்கின்றார். வியாபாரிகளிடம் நல்லவற்றைக் கேட்டுப் பெறுகின்றார். தான் வாங்குபவற்றில் ஏதேனும் பழுதுகளையோ, அசுத்தங்களையோ கண்டால் அவற்றை வாங்காது விட்டுவிடுகின்றார். அவை தனது ஆரோக்கியத்தைப் பாதிக்கும் என்ற உணர்வினாலேயே அவற்றை வாங்குவதிலிருந்து அவர் பின்வாங்குகின்றார்.

ஒரு மனிதருக்கு இரத்த அழுத்தம், அல்லது மயக்கம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. அவரைப் பரிசோதிக்கும் வைத்தியர், நோயை அதிகப்படுத்தும் குறித்த சில உணவுகளைக் கட்டாயமாகத் தவிர்ந்து கொள்ள வேண்டுமென அவருக்கு வலியுறுத்துகின்றார். இந்நிலையில், தனக்கு முன்னால் எவ்வித சுவை மிகுந்த உணவுப் பண்டங்கள் இருப்பினும், தனது உடல் ஆரோக்கியத்தைக் கருத்திற் கொண்டு அவையனைத்தையும் அவர் தவிர்ந்து கொள்வார். உண்ண வேண்டுமென்ற ஆசை இருப்பினும் தனது விருப்பத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள அவர் முனைவார்.

ஒரு மனிதர் பாதையிலே நடந்து செல்கின்ற போது, வெவ்வேறு விதமான பாதை சமிக்ஞை விளக்குகளையும் அவை தொடர்பான சட்டங்களையும் பார்க்கின்றார். அவையனைத்துக்கும் கட்டுப்படுகின்றார். அவற்றை மீறிச் செயற்படுவதைத் தவிர்ந்து கொள்கின்றார். ஏனெனில், அவற்றை மீறி நடக்கின்ற போது, தனக்கும் தன் மூலமாக பிறருக்கும் பெரியதாகவோ சிறியதாகவோ ஆபத்துகள் ஏற்படும் என்பதை அவர் அறிந்து கொண்டுள்ளார்.

இவ்வகையில், தடைசெய்யப்பட்டவை என்ற ஒரு சுற்றுவட்டம் இங்கே தோன்றுகின்றது. நடைமுறை வாழ்வில் இவ்வாறு தடைசெய்யப்பட்டிருப்பவை அனைத்தும் ஏதோ ஒரு வகையில் மனிதனுடைய உடல் ஆரோக்கியத்தினதும் வாழ்வினதும் பாதிப்புக்குக் காரணமாக அமைபவையாக இருக்கின்றன. அதனால் மனிதன் அவற்றைக் கட்டாயமாகத் தவிர்ந்து கொள்கின்றான்.

அவ்வாறே, கற்றுக் கொள்வது அதன் பிரகாரம் செயல் புரிவது என்பவற்றின் தேவையை மனிதன் உணர்கின்றான். அவற்றை செய்வதற்கு ஆசையுறுகின்றான். கல்வித் தேடலை எவ்வகையிலும் புறக்கணிக்கக் கூடாது என்று உறுதி கொள்கின்றான். ஏனெனில், அவ்வாறு புறக்கணிப்பது தன்னுடைய

உயர்வையும் சீராக்கத்தையும் பாதிக்கும் என்பதையும், தனது வறுமைக்கும் பின்னடைவுக்கும் அது காரணமாயமையும் என்பதையும் அவன் அறிந்து வைத்துள்ளான்.

ஒரு சிறுவன் பாதையின் ஒழுங்குகளைத் தெரியாது தவறான முறையில் வீதியைக் கடக்க முனையும் போது, வாகனங்களால் அவனுக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலை தோன்றின், அவனைக் காப்பாற்றுவதற்காக மனிதர்கள் விரைகின்றனர்.

ஒருவன், தனது சிறிய தம்பியோ தங்கையோ பிற சிறார்களுடன் இணைந்து விளையாடுகையில் தவறான செயல்கள் எவற்றையேனும் புரிகின்ற போது, அவ்விளையாட்டை மட்டுமன்றி, அத்தகைய சிறார்களுடனான நட்புறவையும் அவன், தனது தம்பி தங்கைக்குத் தடுத்து விடுகின்றான்.

ஒருவனது தாய் நோயுற்று, தன் அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையில் அவதியுறுகின்ற போது, தன் தாயாருக்கு எல்லா வகையிலும் உதவியும் ஒத்தாசையும் புரிய அவன் முன்வருகின்றான். தன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய தன் தாயாருக்காக இவ்வாறான உதவி புரிவது தனது கடமை என்பதை அவன் அறிந்து வைத்துள்ளான்.

சில நேரங்களில் களைப்பும் சோர்வும் ஒருவனை வாட்டுகின்ற போது, ஓய்வுக்காக ஏதேனும் தோட்டத்திற்கு, அல்லது நண்பர்களை சந்திப்பதற்கு, அல்லது நல்ல சினிமா பார்ப்பதற்காக தொலைக்காட்சியின் முன்னால் அமர்வதற்கு அவன் ஆசைப்படுகின்றான். இவ்வாறான நேரங்களில் ஓய்வைக் கழிப்பதற்காக பொருத்தமான எந்த உபகரணத்தையும் தெரிவு செய்வதற்கான உரிமையும் சுதந்திரமும் அவனுக்குள்ளன. இத்தகைய செயற்பாடுகள் 'ஆகுமானவை' எனும் பெயரில் அழைக்கப்படுகின்றன. மனிதன் அவற்றை செய்வதற்கும் செய்யாது தவிர்ப்பதற்கும் சுதந்திரமுள்ளவனாவான்.

அதேவேளை, தடைசெய்யப்பட்ட அல்லது விலக்கப்பட்ட சில விடயங்கள் உள்ளன. அவற்றைச் செய்வதற்கு மனிதனுக்கு எவ்வித சுதந்திரமுமில்லை. அவ்வாறே, கடமையென வலியுறுத்தப்பட்ட சில விடயங்கள் உள்ளன. அவற்றைச் செய்யாது விட்டுவிடுவதற்கு மனிதனுக்கு எவ்வித சுதந்திரமுமில்லை. ஆகுமான விடயங்களில் மாத்திரமே

செய்வதற்கும் செய்யாது விடுவதற்குமான சுதந்திரம் மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வகையில், சுதந்திரத்தின் சுற்றுவட்டம் என்பது ஆகுமான விடயங்களை மட்டும் குறிப்பதாக அமைகின்றது. கடமையாக்கப்பட்ட அல்லது விலக்கப்பட்ட விடயங்களில் இத்தகைய சுதந்திரம் மனிதனுக்கு இல்லை. ஆகுமானவை, கடமையாக்கப்பட்டவை, விலக்கப்பட்டவை பற்றிய தெளிவுக்காக அல்குர்ஆனையும் நபி (ஸல்) அவர்களின் வழிமுறையையும் அணுக வேண்டியுள்ளது.

அல்குர்ஆன் கூறுவதாவது; அல்லாஹ் தடைசெய்துள்ள விடயங்களைத் தவிர்த்து ஏனைய அனைத்து விடயங்களையும் செய்வதற்கு மனிதனுக்கு பூரணமான சுதந்திரம் உள்ளது. அல்லாஹ்வினால் தடைசெய்யப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் மனிதனுடைய வாழ்க்கை நலனையும் சமூக மேம்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டே தடைசெய்யப்பட்டுள்ளன என்பது கவனிக்கத்தக்கது. மது முதலான போதை வஸ்து பாவனை, விபச்சாரம், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, பொய், அநீதி, சித்திரவதை முதலான அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்துமே மனிதர்களை பல்வேறு வகையில் பாதிக்கக் கூடியவையாக அமைந்துள்ளன.

புனித அல்குர்ஆன் கூறுகின்றது: "(நபியே!) கூறுவீராக, 'வாருங்கள்! உங்கள் இரட்சகன் உங்களுக்கு விலக்கியிருப்பவற்றை நான் உங்களுக்கு ஓதிக் காண்பிக்கின்றேன்" [18]

"என்னுடைய இரட்சகன் தடுத்திருப்பதெல்லாம் வெளிப்படையானதும் மறைமுகமானதுமான மானக்கேடான செயல்களைத்தான்" [19]

"(நபியவர்கள்) நல்லவைகளை அவர்களுக்கு ஆகுமாக்கி, தீயவற்றை அவர்களுக்குத் தடுத்துவிடுவார்" [20]

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒரு முஸ்லிமுக்கு மற்ற முஸ்லிமுடைய உயிர், பொருள், சுயமரியாதை என்பன ஹராமாக்கப்பட்டுள்ளன. (அவற்றைப் பறிக்க முடியாது)" [21]

புனித இஸ்லாம் மார்க்கம், வாழ்வின் அனைத்து வாயில்களையும் மனிதர்களுக்காகத் திறந்து வைத்துள்ளது. 'ஹலால்' எனும் ஆகுமான விடயங்கள், உணவு, குடிப்பு, உடை, திருமணம், அழகு, அறிவுத்தேடல் என வாழ்வின் பல்வேறு துறைகளையும் பொதிந்துள்ள விசாலமான பரப்பாகும். மனித

*வாழ்வில் ஏதேனும் ஒரு வகையில் பாதிப்புகளையும் ஆபத்துகளையும் ஏற்படுத்தும் அம்சங்களே தவிர்ந்து கொள்ளப்பட வேண்டுமென விலக்கப்பட்டுள்ளன.*

*இவ்வகையில், அனைத்து விடயங்களும் அடிப்படையில் ஆகுமானவையே என்பதையும், அவ் ஆகுமான விடயங்களில் மனிதன் பூரணமான சுதந்திரத்துடன் செயற்பட முடியும் என்பதையும், மனித சமுதாயத்தின் நன்மை கருதியே சில விடயங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன என்பதையும், அவற்றின் யதார்த்தங்களை உணர்ந்து மனிதன் அவற்றை விலகி நடப்பது அவசியமென்பதையும் இங்கு உணர முடிகின்றது.*

*ஆகுமானவற்றின் விசாலமான பரப்பு பற்றிப் பேசும் அல்குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகின்றது:*

*“(நபியே!) அல்லாஹ் தன் அடியார்களுக்காக வெளிப்படுத்தியிருக்கும் (சகலவித) அலங்காரத்தையும் உணவு வகைகளில் நல்லவற்றையும் (ஆகாதவையென்று) தடுத்தவர் யார்? என்று கேட்பீராக. அது, இவ்வுலக வாழ்வில் விசுவாசங் கொண்டவர்களுக்கு உரியதாகும்”*[22]

*“விசுவாசங்கொண்டவர்களே! அல்லாஹ் உங்களுக்கு ஆகுமாக்கி வைத்திருக்கும் நல்லவற்றை நீங்கள் விலக்கப்பட்டதாக ஆக்கிக் கொள்ளாதீர்கள்”*[23]

*“அல்லாஹ் உங்களுக்கு அளித்தவற்றில் ஆகுமான நல்லவற்றை நீங்கள் புசியுங்கள்”*[24]

*புனித அல்குர்ஆன், மனித வாழ்க்கையும் அதிலுள்ள நல்லவை அழகானவை அனைத்தும் மனிதனுக்கு ஆகுமாக்கப்பட்டுள்ளன என்பதை வலியுறுத்துவதோடு, அவற்றை அனுபவிக்கும் விடயங்களில் மனிதன் பூரண சுதந்திரமுடையவன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றது. அவன் மீது விலக்காக்கப்பட்டுள்ள அனைத்தும் அவனது தனிப்பட்ட, மற்றும் சமூக வாழ்வில் பாதிப்புகளை ஏற்படுத்தும் அம்சங்களே என்பதை அவன் விளங்கிக் கொள்ள வேண்டுமெனவும் இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. அப்போதே மனிதன், தனக்குள்ள சுதந்திரத்தை தன் வாழ்வில் சரியாகப் பிரயோகிக்கும் சாத்தியத்தை அடைந்து கொள்வான். அவனே உலக வாழ்வில் முழுமைத்துவம் அடைந்த மனிதனாகவும் மிளிர்வான்.*